சுருக்கம்

நலத்திட்டம் – முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், 2011– சேமிப்பு வங்கி கணக்கிலுள்ள தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தின் செலவிடப்படாத நிதியினை ஒரு புதிய தன் வைப்புக் கணக்கில் ( Personal Deposit Account) மாற்றம் செய்வதற்கு அரசு (நிலை) ஆணை எண்.265, வருவாய் [நி.சீ.1(2)] துறை, நாள். 10.9.2011–ல் திருத்தம் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் [நி.சீ.1(2)] துறை**

**அரசு (நிலை) ஆணை எண்.281** **நாள். 02.08.2012.**

**படிக்கவும்:**

1. அரசு (நிலை) ஆணை எண்.265, வருவாய் [நி.சீ.1(2)] துறை, நாள். 10.9.2011.
2. முதன்மைச் செயலர் / நிலச்சீர்திருத்த ஆணையரின் கடித எண். H1/9760/2011 (L. Ref) நாள்.4.6.2011.

------

**ஆணை**

அரசாணை (நிலை) எண். 265, வருவாய் வருவாய் [நி.சீ.1(2)] துறை, நாள். 10.9.2011–ல் பத்தி 10–க்கான திருத்தம் பின்வருமாறு வெளியிடப்படுகிறது:–

| பத்தி 10–ல் தற்போதுள்ள பகுதி | கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது:– |
|---|---|
| தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நலவாரியத்தின் கணக்கில் உள்ள நிதியானது நிலச்சீர்திருத்த இயக்குநரின் ஒரு பொதுவைப்புக் கணக்கில் (Public Deposit Account) பராமரிக்கப்படவும் அந்த கணக்கில் உள்ள தொகையை படிவங்கள், பதிவேடுகள், ஆரம்பகட்ட அடையாள அட்டைகள் (அடையாள வில்லைகள்) முதலியன அச்சடிக்கவும், வாகன எரிபொருள் செலவிற்காகவும் பயன்படுத்திக் கொள்ள நிலச்சீர்திருத்த இயக்குநர் | I. தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் உள்ள நிதியத்தினை ஒரு புதிய தன் வைப்புக் கணக்கினை (Personal Deposit] தொடங்கி அதற்கு மாற்றம் செய்ய இயக்குநர், நிலச்சீர்திருத்தத் துறை அவர்களுக்கு ஆணையிடப்படுகிறது.<br><br>II. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011–ல் செயல்படுத்தும் பொருட்டு தன் வைப்புக் கணக்கிலுள்ள நிதியிலிருந்து படிவங்கள், பதிவேடுகள், அடையாள வில்லைகள், அடையாள அட்டைகள் ஆகியவை அச்சடிக்கவும் மற்றும் |

....தொ.பா.

Verified RealEstate TM

| | |
|---|---|
| அனுமதிக்கப்படுகிறார். | தொலைபேசி கட்டணம், எரிபொருள் செலவினங்கள் மற்றும் வாகனங்கள் பராமரிப்பு ஆகிய செலவினங்களை மேற்கொள்ள நிலச்சீர்திருத்தத்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது.<br><br>III. தன் வைப்பு நிதிக்கணக்கை தொடங்கி செயல்படுத்த அரசு ஆணை (நிலை) எண்.395, நிதி (சம்பளங்கள்) துறை, நாள் 7.8.98–ல் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றுமாறு நிலச்சீர்திருத்த இயக்குநர் அவர்களுக்கு ஆணையிடப்படுகிறது. |

2. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.39595/நிதி (வருவாய்)/2012, நாள் 24.7.2012 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

கு. ஞானதேசிகன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம்,
சென்னை – 600 005.
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர், சேப்பாக்கம்,
சென்னை – 600 005.
முதன்மைச் செயலாளர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையர், சேப்பாக்கம்,
சென்னை – 600 005.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
மாநில கணக்காயர், சென்னை – 600 018 (பெயரில்)
மாநில கணக்காயர், சென்னை – 600 035 (பெயரில்).
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள், சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள் (வடக்கு), (தெற்கு), (கிழக்கு), சென்னை.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சரின் செயலர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித் (வருவாய்/வரவு–செலவு–II) துறை, சென்னை– 600 009.
இருப்பு கோப்பு / உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

VerifiedRealEstate™